## சுருக்கம்

பணியமைப்பு – பொதுப்பணித்துறை – தமிழ்நாடு அமைச்சுப் பணி– கருணை அடிப்படையில் பணி நியமனம்– திரு எஸ்.ஹரிகிருஷ்ணன், த/பெ.காலஞ்சென்ற அரசு ஊழியர் திரு எல்.சத்தியமூர்த்தி– கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்டது – பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பொதுப்பணி (பி1) துறை**

அரசாணை (3ப) எண்.71

நாள் : 14.10.2020
சார்வரி, புரட்டாசி 28.
திருவள்ளுவர் ஆண்டு 2051

படிக்கப்பட்டன:

1. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, நாள் 01.08.2018.
2. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்(கியூ.1) துறை, நாள் 23.01.2020.
3. தலைமைப் பொறியாளர், பொதுப்பணித்துறை, இயக்கம் மற்றும் பராமரிப்பு, நீர்வள ஆதாரத்துறை, சென்னை அவர்களின் கடிதம் எண். எ2/1354/2020, நாள் 01.06.2020.

-------

ஆணை:–

மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், நிலநீர் கோட்டம், நீர்வள ஆதாரத்துறை, தரமணி சென்னை அலுவலகத்தில் அலுவலக உதவியாளராகப் பணிபுரிந்து வந்த திரு எல்.சத்தியமூர்த்தி கடந்த 06.10.2011 அன்று காலமானதைத் தொடர்ந்து, அவரது வாரிசுதாரர்/ மகன் திரு எஸ்.ஹரிகிருஷ்ணன் என்பவர் தனக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் வேலை வழங்க கேட்டுக் கொண்டதன் பேரில், முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை, சென்னை அவர்களால் திரு எஸ்.ஹரிகிருஷ்ணன் என்பவருக்கு கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் வழங்கப்பட்டு, தனியர் கண்காணிப்புப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை, அணைகள் பாதுகாப்பு இயக்ககம், சென்னை அலுவலகத்தில் 26.11.2018 பிற்பகல் முதல் பணிமேற்கொண்டு வருகிறார் என்றும், பத்தாம் வகுப்பு தேர்வில் மார்ச் 2005–இல் தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும், தனியரின் பிறந்த தேதி 27.08.1989 என்றும் தெரிவித்து, தனியரின் பணியினை வரன்முறை செய்வதற்குத் தேவையான அனைத்து அசல் சான்றிதழ்கள் / சான்றாவணங்களை அனுப்பி வைத்து, தனியரின் பணியினை அவர் அப்பணியில் சேர்ந்த நாளான 26.11.2018 பிற்பகல் முதல் வரன்முறை செய்து ஆணை வழங்குமாறு தலைமைப் பொறியாளர், இயக்கம் மற்றும் பராமரிப்பு, நீர்வள ஆதாரத்துறை, சென்னை அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், கருணை அடிப்படையில் பணிநியமனம் பெற்றவரின் பணியினை வரன்முறை செய்ய தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினைப் பெறும் நடைமுறை கைவிடப்படுவதாக ஆணையிடப்பட்டுள்ளது.

3. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்குவது தொடர்பாக ஒருங்கிணைந்த வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டுள்ளன.

(த.பி.பா.)